# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035

தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் - 13.05.2026**

**முன்னிலை**

## திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)
## மாநில தகவல் ஆணையர்

*****

**வழக்கு எண். CP 2983/F/2025**

திரு.இரா.கோபிநாத் .. புகார்தாரர்

/எதிர்/

பொதுதகவல் அலுவலர் /
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
மாவட்ட ஆட்சியர் வளாகம், .. பொது அதிகார அமைப்பு
செங்கல்பட்டு-603111.

**ஆணை**

இவ்வாணையத்தில் இன்று 13.05.2026 நடைபெற்ற விசாரணைக்கு மனுதாரர் திரு.இரா.கோபிநாத் அவர்கள் ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு நடைமுறை) விதிகள் 2012, விதி 7(2)-ன்படி மனுதாரர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. பொது அதிகார அமைப்பின் சார்பாக, பொதுத்தகவல் அலுவலர் திரு.P.S.வரதராஜன், திட்ட உதவியாளர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், செங்கல்பட்டு அவர்கள் ஆஜரானார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

2. மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன் கீழ், 19/04/2025 தேதியிட்டு தாக்கல் செய்துள்ள மனுவில் மாவட்ட ஊரமைப்பு துணை இயக்குநர் செங்கல்பட்டு மண்டலம் அவர்கள் கால கட்டத்தில் கடந்த 01.04.2007 முதல் 31.03.2012 வரை தனியார் தொழிற்சாலை / நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கியது தொடர்பான ஆவணங்கள் கோப்புகள் தகவல்களை RTI act 2005 sec 2J படி பார்வையிடும் போது தனக்கு தேவையான அரசு சார்ந்த பொது ஆவண தகவல்களை எடுத்துக்கொள்ள அனுமதி என்பன போன்ற 4 இனங்களில் தகவல்களைக் கோரியுள்ளார்.

3. அம்மனுவைப்பெற்ற பொதுத்தகவல் அலுவலர் தகவல் வழங்கவில்லை. தனக்கு சரியான தகவல் வழங்கவில்லை என மனுதாரர் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 18(1)ன் கீழ் 20.06.2025 நாளிட்ட புகார் மனுவினை ஆணையத்திற்கு தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் தாக்கல் செய்துள்ள புகார் மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (13.05.2026) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

4. இன்றைய நேரடி விசாரணைக்கு ஆஜரான பொதுதகவல் அலுவலர் மனுதாரர் 6(1) மனுவில் கோரிய இனங்கள் குறித்து எந்தவித ஆவணங்களையும் ஆணையத்தின் முன் சமர்ப்பிக்கவில்லை.

5. இன்றைய விசாரணையில் ஆணையத்தின் முன் உள்ள ஆவணங்களை பரிசீலனை செய்கையில் பொதுத்தகவல் அலுவலர் எவ்வித தகவல் மற்றும் ஆவணங்களையும் சமர்ப்பிக்காததை இவ்வாணையம் கண்டித்து கீழ்காணும் உத்தரவினை பிறப்பிக்கிறது.

- **“மனுதாரரின் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 6(1)ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் மனுதாரர் கோரியுள்ள தகவலை உரிய காலத்தில் வழங்காத அப்போதைய பொதுத்தகவல் அலுவலர் திரு.P.S.வரதராஜன், திட்ட உதவியாளர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், செங்கல்பட்டு அவர்களுக்கு சட்ட பிரிவு 20(1) மற்றும் 20(2)ன் கீழ் ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்பதற்கான அவரது எழுத்து மூல விளக்கத்தினை 18.06.2026 அன்று திரு.P.S.வரதராஜன் அப்போதைய / தற்போதைய பொதுதகவல் அலுவலர் அவர்கள் ஆணையத்தில் நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு ஆணையிடுகிறது”.**

**ஒம்/-(அபய் குமார் சிங்)**
**மாநில தகவல் ஆணையர்**

(ஆணையத்தின் ஆணைப்படி)

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். CP 2983/F/2025</u>**

பெறுநர்

**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**

பொதுதகவல் அலுவலர் /
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
மாவட்ட ஆட்சியர் வளாகம்,
செங்கல்பட்டு-603111.

**<u>மனுதாரர்:-</u>**

திரு.இரா.கோபிநாத்,
எண்.7/113, முத்தாம்மன் கோவில் தெரு,
சதுரங்கப்பட்டிணம் கிராமம்,
செங்கல்பட்டு-603102

**<u>நகல்</u>**
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம்,
எண்.5, காமராஜர் சாலை,
சென்னை-5.

பதிவாளர்,
மாநில தகவல் ஆணையம்,
சென்னை-35.

Copy to file: KR/PA